
# திராவிடத்தால் வாழ்கிறோம்

808

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## சமூகநீதி எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் மறைந்தார்!



இந்திய அளவிலான இட ஒதுக்கீட்டின் வரலாற்றை விளக்கும் வகையில், 'முரசொலி' பாசறைப் பக்கத்தில் 'எல்லோர்க்கும் எல்லாம்' என்னும் தொடரை கடந்த ஓராண்டாக எழுதி வந்தவர் திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் இடஒதுக்கீட்டுக்கான குரல்கள், போராட்டங்கள், சட்டங்கள் எப்படி உருவாகின என்ற வரலாற்றைத் தொகுத்து, அவர் எழுதி வந்த இத்தொடர் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதற்கென தனி வாசகர்களும் உருவாகினர்.

அத்தகைய அற்புதமான தொடரைத் தந்து கொண்டிருந்த எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் 12.04.2025 அன்று முடிவெய்திவிட்டார். அவரது மரணம் குடும்பத்தாரை மட்டுமின்றி, ஒட்டுமொத்த திராவிட இயக்க உணர்வாளர்களையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றிக்கொண்டே எழுத்துப் பணியையும் சிறப்பாக மேற்கொண்டு வந்தவர் சு.விஜயபாஸ்கர். இவர் தொகுத்த 'உயர்ஜாதியினருக்கு 10% ஈ.டபிள்யூ.எஸ். (E.W.S.) இடஒதுக்கீடு சரியா? தவறா?' நூல் சமூகநீதியை அழுத்தமாகச் சொல்லும் ஆவணம். 'பாலஸ்தீனம் முதல் இஸ்ரேல் வரை', 'வாடகைத்தாய் முறை மீதான கேள்விகள்' ஆகியவை இவர் எழுதிய பிற நூல்கள்.

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி கடந்த ஆண்டில் நடத்திய 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டுப் பேச்சுப் போட்டியில் நடுவராகப் பங்கேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டார். திராவிட இயக்கத்தினருடன் அனைத்துத் தளங்களிலும் மிக நெருக்கமான நட்புறவைக் கொண்டிருந்தவரும், திராவிட இயக்கச் சித்தாந்தத்தை அடுத்த தலைமுறை எழுத்தாகக் கடத்தும் அரும்பெரும் பணியை, மேற்கொண்டிருந்தவருமான சு.விஜயபாஸ்கரின் மறைவு, திராவிட இயக்கத்துக்கும் சமூகநீதி எழுத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு.

அவர் விட்டுச் சென்ற சமூகநீதிப் பணியை நாம் தொடர்வோம்! அதுவே அவருக்கான அஞ்சலி!

## ஃப்ளாஷ்பேக்





தஞ்சை கூத்தரசன்

### பேராசிரியர் வெளியிட்ட நூல்!

சென்னை, அண்ணா சாலையில் அன்றைய ஆனந்த் வளாகத்தில் அமைந்துள்ள கலைமாமணி ஜி.உமாபதி கலையரங்கத்தில் பேராசிரியர் பெ.கந்தன் எழுதிய ஆய்வு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த இந்நூலை பேராசிரியர் அவர்கள் வெளியிட நீதியரசர் ஏ.கே.இலக்குமணன் பெற்றுக் கொள்கிறார். உடன் இன்றைய கழக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், ஈரோடு இறைவன் ஆகியோருடன் நானும் உள்ளேன்.

**– தஞ்சை கூத்தரசன், தி.மு.க. தலைமை இலக்கிய அணி புரவலர், இராயப்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மலரும் நினைவுகள் (ம்லரு)

### திரைத்துறையில் தி.மு.க.!

1954-ஆம் ஆண்டில் 34 தமிழ்த் திரைப்படங்கள் வெளியாகின. அவற்றில் 'மனோகரா', 'சொர்க்கவாசல்', 'இல்லறஜோதி', 'மலைக்கள்ளன்', 'துளிவிஷம்', 'சுகம் எங்கே?', 'அம்மையப்பன்', 'ரத்தக்கண்ணீர்', 'கூண்டுக்கிளி' ஆகிய 9 திரைப்படங்களின் ஏதேனும் ஓர் அம்சத்திலோ அல்லது திரைப்படத்தின் முக்கிய பொறுப்பை ஏற்றவர்களுக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொடர்பு இருந்தது.

# திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

116

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# நாட்டின் மிகப்பெரிய மலைப்பிரதேச மருத்துவமனை!

## உதகையின் உயரத்தில் ஒரு சாதனைத் திட்டம்!

இயற்கையின் தாய்மடியான மலைப் பகுதிகள் அனைத்தும் சுற்றுலாவுக்கும் கொண்டாட்டத்திற்கும் உரியவை என்பதே, உலகெங்கும் மலைப்பகுதிக்கு வெளியே வாழும் மக்களின் மனநிலை. ஆனால், மலைப்பகுதிகளில் வாழும் மக்களின் மனநிலை வேறு. மற்ற பகுதியினரைப் போல வாழ்வாதாரச் சமநிலையைப் பேண வேண்டும், அவர்களுக்கான வாய்ப்புகளும் வளங்களும் நமக்கும் கிடைத்திட வேண்டுமென்பதுதான் மலைப்பகுதி மக்களின் எண்ணமாக இருக்கும். அதில் சாலைகள், குடிநீர், மின் விளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகள் முதல் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகள் வரை அனைத்தும் அடங்கும்.

அந்தவகையில், பழங்குடியினருக்கான குடியிருப்புகள், ஆராய்ச்சி மையம், சமத்துவக் கூடங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான பேருந்து வசதிகள், சுற்றுலா மையம் உட்பட கடந்த 4 ஆண்டுகளில் 60 திட்டங்களை, நீலகிரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காகத் தந்திருக்கிறது திராவிட மாடல் அரசு. அதன் தொடர்ச்சியாக, இந்தியத் துணைக்கண்டமே திரும்பிப் பார்க்கும் வகையில், மிகப் பிரமாண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அமைத்திருக்கிறது, திராவிட மாடல் அரசு.

### மலைப்பிரதேசமும் மருத்துவமும்!

நீட் தேர்வை தமிழ்நாடு எதிர்ப்பதற்கான காரணம், அது மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைப்பது மட்டுமல்ல; கிராமப்புறங்களுக்கான மருத்துவ சேவையைக் குலைக்கிறது என்பதும் முக்கிய காரணம். கிராமப்புறங்கள் மட்டுமல்ல, மலைப்பிரதேசங்களையும் சேர்த்தே பாதிக்கிறது. பொதுவாகவே மலைப்பிரதேசங்களில் தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நீலகிரி மாவட்டம், ஒன்றுதான் முழுமையான மலைப்பிரதேச மாவட்டம். அங்கு 35 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 7 மருத்துவமனைகளும் உள்ளன. இவைத் தவிர சில தனியார் மருத்துவமனைகளும் உள்ளன. அத்தியாவசிய மருத்துவ சேவைகளை, இதுவே பூர்த்திசெய்துவிடும் என்றாலும், சில உயர்தர சிகிச்சைகளுக்காக 3 மணி நேரம் பயணம் செய்து கோவைக்குச் செல்ல வேண்டுமென்பதுதான் இதற்கு முன்பிருந்த நிலை.

ஆனால், இனி எத்தகைய உயர் சிகிச்சையையும் நீலகிரியிலேயே பெறலாம், அதுவும் அரசு மருத்துவமனையிலேயே பெறலாம். 700 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ சேவைகளை 06.04.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்து, அம்மருத்துவமனையின் அறுவை சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட வசதிகளைப் பார்வையிட்டார்.

### மருத்துவமனையின் சிறப்பம்சங்கள்

உதகை, பிங்கர் போஸ்ட் பகுதியில் நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 25 ஏக்கர் பரப்பளவில், 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கைகளுடன் 8 தனித்துவமான கட்டடங்களை ஒன்றாக இணைக்கும் மையக் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கும் வகையில், 230 மருத்துவர்கள். 330 செவிலியர்கள், 5 முதன்மை மருந்தாளுநர்கள், 13 மருந்தாளுநர்கள். 13 ஆய்வக நுட்புநர்கள். 13 கதிர்வீச்சு நுட்புநர்கள் மற்றும் 5 மருத்துவப் பதிவேடு நுட்புநர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 7.52 கோடி ரூபாய் மதிப்பிலான MRI 1.5 Tesla. 2.18 8 மதிப்பிலான CT Scan -16 Slice, 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 800 MA Digital X-Ray உள்ளிட்ட உயர்தர கதிரியக்கக் கருவிகள் மற்றும் 1.74 கோடி ரூபாய் மதிப்பிலான இதர மருத்துவ உபகரணங்கள் இம்மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளன.

மேலும் அவசர மற்றும் திட்டமிட்ட அறுவை சிகிச்சைகளுக்குத் துணையாக அனைத்து வசதிகளும் கொண்ட இரத்த வங்கி அமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு சத்தான உணவு வழங்க, தனி சமையலறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிநவீன வசதிகளுடன் தானியங்கிச் சலவை இயந்திரம், உலர்த்தும் இயந்திரம் மற்றும் இஸ்த்ரி இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. உடற்கூராய்வுக்கான கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி, மருத்துவக் கழிவுகளைத் திறம்படச் சேகரித்து, உடனடி செயலாக்கம் செய்து, பாதுகாப்பான முறையில் அகற்றும் பணிகளை உறுதி செய்யும் வகையில், சிறப்பான மருத்துவக் கழிவு மேலாண்மை மையம் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனை வளாகத்திற்குள் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

### 8 பிளாக்குகளில் வழங்கப்படும் சேவைகள்

அவசர மருத்துவ பிரிவிற்கு தனிக் கட்டடம், வெளிநோயாளிகள் மருத்துவ சேவைகள் ஏ மற்றும் பி பிளாக் கட்டடங்களில் வழங்கப்படுகின்றன. பிளாக் சி-யில் 10 நவீன அறுவை சிகிச்சை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிளாக் டி-யில் தீவிர மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுகள், 15 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் (ECRC) அமைக்கப்பட்டுள்ளன. ஈ, எஃப், க்யூ, ஹெச் ஆகிய பிளாக்குகளில் உள்நோயாளிகளுக்கான சேவைகள் பிரிவு இயங்குகிறது. மேலும் பிளாக் எஃப்-இல் மலைவாழ் மக்களிடையே காணப்படும் இரத்தசோகை, அரிவாள் செல் இரத்த சோகை, தலசீமியா ஆகியவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்படி பழங்குடியிருக்கான தனிப்பிரிவு நாட்டில் வேறெந்த மருத்துவமனையிலும் இல்லை.







அவசர சிகிச்சைப் பிரிவில் 20 படுக்கைகளுடன் 24 மணி நேரமும் விபத்து மற்றும் அவசர மருத்துவ சேவைகள் ஆகியவை வழங்கப்படுகின்றது. அனைத்து பிளாக்குகளுக்கும் தனித்தனியாக மின்தூக்கி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

> மலைப்பிரதேசத்தில் 700 படுக்கைகள் கொண்ட நாட்டின் ஒரே அரசு மருத்துவமனை.

### மலைப்பிரதேசத்தில் 2-வது மருத்துவக் கல்லூரி

இந்தியாவிலேயே மலைப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இது. இதற்கு முன்பு இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி மலைப்பிரதேசத்தில் 700 படுக்கைகள் கொண்ட நாட்டின் ஒரே அரசு மருத்துவமனை இது. திராவிட மாடல் அரசின் சாதனை உயரத்தை மேலும் ஒரு படி உயர்த்தியிருக்கிறது உதகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

...சாதனை தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131